1979 மார்ச் 27]

பெண்ணாடம் நல்லூர் ஒன்றியம்.

* வினா எண். 550— திரு. எம். பெரியசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டம் மங்களூர் தொகுதியைச் சேர்ந்த பெண்ணாடம் நல்லூர் யூனியனாக இருப்பதை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இல்லை.

திரு. ஆர். சி. சுப்பிரமணியம் : இராமநாதபுரம் ஏற்கெனவே .... (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண். 551 ..

திரு. துரை முத்துசாமி : எங்கள் பகுதியை பொறுத்த முன் கேள்வியில் கையைத் தூக்கிக் கொண்டே இருந்தும் கூப்பிடவில்லை. அதிலே துணைக் கேள்வி கேட்க விரும்புகிறேன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரை முத்துசாமி கேள்வி கேட்க அனுமதி கொடுக்க முடியாது. என்னைக் கட்டாயப் படுத்தி துணைக் கேள்விகள் கேட்க முடியாது. எதைப் பேசலாம், எதைப் பேசக் கூடாது என்கிற முறை இருக்கிறது. மிரட்டுகிற வகையில் கேட்கக் கூடாது. முதலில் அதைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

விலைவாசி புள்ளி விவரம்

*வினா எண். 551— திரு வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1957 முதல் 1977 வரை விலைவாசி புள்ளி விவரம் எந்த அளவுக்கு உயர்ந்துள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அவை முன் * ஒரு விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஐயா.....

(குறுக்கீடு— ஐயா என்று கூறலாமா ?)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் நீண்ட கால உறுப்பினர். அவருக்கே தெரிய வேண்டும்.

---

* 493-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.]

திரு. வி. கே. கோதண்டராமன் : ஐயா என்று சொல்வது தவறு என்று சொன்னால் திருத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோதண்டராமன், தலைவரைப் பார்த்துப் பேசுகின்றபோது பேரவைத் தலைவர் அவர்களே என்று கூறுவது தான் நல்லது, அதுதான் மரபு. தாங்கள் எப்படியும் பேசலாம், அதுவேறு.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்களை அண்ணன் என்று கூடச் சொல்லலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது தவறு, பேரவைத் தலைவர் என்று தான் சொல்லவேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே 1957-இல் 493 புள்ளி என்றும், 1977இல் 2,331 புள்ளி என்ற அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்றால் 5,6 மடங்கு உயர்ந்து இருக்கிறது. ஆனால் 1957 ஆம் ஆண்டிலே வாங்கின சம்பளத்தைவிட, கூலியைவிட அதற்கேற்றாற்போல் 5,6 மடங்கு உயர்ந்துள்ளதா ? அப்படி உயர்த்தப்படவில்லையென்றால் அதற்கேற்றாற்போல் உயர்த்துவற்கு ஏதேனும் திட்டம் உண்டா? வேறு கேள்வி கேட்டால் பதில் சொல்கிறேன் என்று தட்டிக் கழிக்காமல் தயவுசெய்து சரியான பதில் அளிப்பாரா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, ஊதியத்தை நிர்ணயிக்கும்போது கன்சாலிடேட் வேஜஸ் என்ற முறையிலே அடிப்படைச் சம்பளம், பஞ்சப்படி என்பதைச் சேர்த்து நிர்ணயிப்பது என்பது ஒரு பழக்கம். இன்னொரு வழக்கம், அடிப்படைச் சம்பளம் என்று கொடுத்துவிட்டு வேரியபிள் டி.ஏ., பிக்சட் டி.ஏ., அதாவது மாறக்கூடிய பஞ்சப்படி, நிலையான பஞ்சப்படி என்ற வகையிலே நிர்ணயிப்பது. மாறக்கூடிய பஞ்சப்படி என்பது விலைவாசிப் புள்ளிக்கு ஏற்றத்திற்கு ஏற்ப ஆங்காங்குள்ள சங்கங்களின் பார்கெயினிங் கெபாஸிடி, பேரம் பேசுகின்ற சக்திக்கேற்ப செய்யப்படுகிறது. இதை அந்த அந்தத் தொழிற் சங்கங்கள் செய்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் தொழிற்சங்க தலைவராக இருந்தபோது நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து இந்தப் புள்ளி விவர அறிக்கையே தவறானது, சரியான அறிக்கை அளிக்கப்படவேண்டுமென்று ஒன்று சேர்ந்து கிளர்ச்சி, போராட்டம் நடத்தினோம். அந்தத் தவறான புள்ளி தவறு என்ற அடிப்படையிலேகூட,

1979 மார்ச் 27]

கேற்றாற்போல பல இடங்களிலே கூலி உயரவேண்டும், பஞ்சப் படி உயரவேண்டும் சம்பளம் உயரவேண்டும் என்பதற்காகவே கிளர்ச்சி, போராட்டம் இவைகளை என்.ஜி.ஓக்கள் உள்பட, கார்ப்பரேஷன் ஊழியர்கள் உட்பட நடைமுறையிலே எத்தனை போராட்டங்களை நடத்தி கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சொன்னால் தான் தெளிவாக இருக்கும், ஆகவே, அந்த அடிப்படையிலே உயர்த்தக்கூடிய ஏற்பாட்டை உடனடியாக செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னதுபோல் விலைவாசி புள்ளி உயர்த்துவதற்கேற்ப பஞ்சப்படி உயர்த்தப்பட வேண்டும், சம்பளம் உயர்த்தப்படவேண்டும் என்பது அந்தந்தத் தொழிற் சங்கங்கள் செய்யவேண்டிய கடமையாகும். அவர்கள் தான் அதற்கேற்ற நடவடிக்கைகளை எடுத்து கொள்ளவேண்டும். அவர்களது பேச்சுவார்த்தை தோல்வியுற்றால் தொழிற் தகராறு எழுப்பலாம், அப்போது அரசு அதிகாரிகள் அதிலே தலையிடுவார்கள்.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையிலே 1977 ஆம் ஆண்டிலே 11 மாதங்களுக்கு சராசரி 372 அதிகமாக இருக்கிறது. அதிலே 2,331 என்று இருக்கிறது. இது எந்தப் புள்ளி? கன்ஸ்யூமர் பிரைஸ் இண்டெக்ஸா? அல்லது வேறு எந்த இண்டெக்ஸ் ? சென்னை நகரத்திலே 1939 ஆம் வருடத்திலே அந்த சிரிஸிலே கடந்த மாதம் 1,561 என்று குறிப்பிட்டுள்ளது. ஆனால் இங்கே இரண்டாயிரத்துச் சொச்சம் மேலே போய் கொண்டிருக்கிறது. அப்படியானால் இது எந்தப் புள்ளி? எந்தப் புள்ளியாக இருந்தாலும், அதற்கேற்ற பஞ்சப்படி உயர்த்தப்படவில்லை அரசு உட்பட. பார்கெயினிங் கெபாஸிடியைப் பொறுத்து அதை அந்தத் தொழிற்சங்கம் தான் செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த பார்கெயினிங் கெபாஸிடியை அதிகப்படுத்துவதற்குப் பதிலாக அதை உடைப்பதற்காக முதலாளிகள் முயற்சி செய்கிறார்கள், ஆகவே, அதையும் சரிப்படுத்துவதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா ?

மாண்புமிகு திரு. எஸ் இராகவானந்தம் : தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்டிருப்பது சராசரி. நுகர்வோர் விலை குறியீட்டு எண்கள் சென்னை நகரம், கடலூர், திருச்சிராப்பள்ளி, நாகர்கோவில், மதுரை, கோயம்புத்தூர், குனூர் ஆகிய ஏழு மையங்களில் சேகரிக்கப்பட்டு வருகின்றன. குனூரைத் தவிர, ஏனைய பகுதிகளில் சேகரிக்கப்படும் குறியீட்டெண்கள் தொழிற் சாலைப் பணியாளர்கள் சம்பந்தப்பட்டவையாகும். குனூரில்

தயாரிக்கப்படும் குறியீட்டெண்கள் மலைத் தோட்டத் தொழிலாளர்களைப் பற்றியவை. சென்னை நகரைப் பொறுத்தவரை, நுகர்வோர் விலைக்குறியீட்டெண்கள் புள்ளியல் துறையில் சேகரிக்கப்பட்டு, சிம்லாவில் உள்ள தொழிலாளர் நலத் துறை இயக்குநரின் ஒப்புதலுக்கு அனுப்பப்படுகின்றன.

[முற்பகல் 9-40]

அவரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றதும், சென்னை நகரின் குறியீட்டு எண்கள் தமிழ்நாடு புள்ளியியல் துறை இயக்குநரால் வெளியிடப்படுகின்றன.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, மத்திய அரசின் பொது நிறுவனங்களில் இருப்பவர்களுக்கும், மத்திய அரசு ஊழியர்களுக்கும் சென்னை நகரில் காஸ்ட் ஆஃப் இண்டெக்ஸ் கூடுதலாக இருக்கிறது என்றால் ஓரளவுக்குக் கூட்டிக் கொடுக்கப்படுகிறது. ஆனால் மாநில அரசு நிறுவனங்கள் அல்லது ஊழியர்களுக்கு அந்த அடிப்படையில் அதற்கு 'ஈகுவல் பேரிட்டி' கொடுக்க இந்த அரசு முன்வருமா? பார்கெயின் கெபாசிட்டியைப் பொறுத்தது என்று சொல்கிறார்கள். கெபாசிட்டியைப் அதிகப் படுத்த இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :— பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

It is not only the bargaining Capacity but also the paying Capacity of the establishment that is invoeved.

சிமெண்ட் ஆலைத் தொழிலாளர் ஊதியம்.

* வினா எண். 552—திரு கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிமெண்ட் ஆலைத் தொழிலாளர்களின் சம்பளங்களை திருத்தி அமைத்து சம்பள உயர்வு கொடுக்க ஒரு ஆர்பிட்ரேஷன் மத்திய அரசினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதைஅரசு அறியுமா?

(ஆ) தமிழகத்தில் உள்ள சிமெண்ட் ஆலைத் தொழிலாளர்களின் சம்பள கோரிக்கைகளை அந்த ஆர்பிட்ரேஷன்முன்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா ?